1972 சனவரி 29]

வடார்க்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள் வேலே நிறுத்தம்

* 132 வினு—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 20—6—1970-ம் நாளன்று வடார்க்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. என். வி நடராசன்: (அ) ஆம்.

(இ) பீடிச் சட்டத்தை செயற்படுத்துதல், நிரந்தர வேலைக்கு உத்தரவாதம், வேலையில்லாத காலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குதல், 1968-69 1969-70 ஆகிய ஆண்டுக்களுக்கான பூரிப்பு ஊதியம் முதலான கோரிக்கைகள் மீது பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

திரு. கே. ஏ வகாப்: தலைவரவர்களே, இப்பொழுது அவர்கள் கூறியுள்ள குறைபாடுகளெல்லாம் நீக்கப்பட்டு விட்டதா ? அப்படி நீக்கப்படவில்லையென்ருல் அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? பாவம், பீடித் தொழிலாளர்கள் எவ்வளவோ இன்னல்களுக்கிடையே சிரமப்பட்டு வருகிருர்கள். ஆகவே அவர்களின் கோரிக்கையை, குறிப்பாக கூலி உயர்வு, வேலை நிரந்தரம், சுகாதார வசதி ஆகிய இவற்றிலாவது அக்கறை செலுத்த, முதலாளிகளை அணுகி ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி நடராசன்: தலைவரவர்களே, அந்த பீடித் தொழில் முதலாளிகள் நீதி மன்றத்திலே ரிட் போட்டிருப்பதால் மேற்கொண்டு ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனுல் தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய ஊதியம், பூரிப்பு ஊதியம் முதலியவைகளை முன்பணமாகக் கோர்ட்டில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஆவன செய்யப்படும்.

திரு. கே டி. கே. தங்கமணி: சார், பீடித் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் சம்பந்தமாக ஒரு குழு அரசு அமைத்திருக்கிறது. அந்தக் குழு தன்னுடைய முடிவை சீக்கிரமாக அரசுக்குக் கொடுக்க அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, 6 திங்களுக்குள்ளாக அந்த அறிக்கையைத் தருமாறு தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

Working system for beedi workers

* 133 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government have any proposal to introduce six days a week working system to the Beedi workers; and

(b) if so, the details thereof?